# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in Email: registrar@tnteu.ac.in; Phone – 044 2838 9038

**Lr. No.TNTEU/R/Elig./B.Ed Admission 2018-19/171** **Date: 18.07.2018**

முனைவர் நா.ரவீந்திரநாத் தாகூர், Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்
முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 – பி.எட் சேர்க்கை – பல்கலைக்கழக இணைவு பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - பி.எட் சேர்க்கைக்கான கடைசி நாள், தகுதிக்கட்டணம் செலுத்துதல், அசல் சான்றிதழ் சரிபார்த்தல் - கால அட்டவணை அறிவித்தல் - தொடர்பாக.

பார்வை: இப்பல்கலைக்கழக கடித எண்:TNTEU/R/B.Ed Admission 2018-19/2018/163, நாள் 05.07.2018.

------

பார்வையில் கண்ட இப்பல்கலைக்கழகக் கடிதத்தில் கேட்டுக்கொண்டவாறு, இப்பல்கலைக் கழக இணைவுடன் செயல்படும் அனைத்துச் சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில், நடப்புக்கல்வி ஆண்டுக்கான (2018-2019) பி.எட் சேர்க்கை **18.06.2018**-லிருந்து (அரசு/அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளில் பி.எட் சேர்க்கைக்காக அரசு விளம்பரம் செய்த நாளிலிருந்து) துவங்கி நடைபெற்று வருகிறது.

நடப்பு கல்வி ஆண்டு பி.எட் சேர்க்கைக்காக, அரசு நடத்தும் ஒற்றைச் சாளர கலந்தாய்வு 18.07.2018-ல் துவங்கி, 24.07.2018 அன்று முடிவடைகிறது. ஏற்கெனவே, இப்பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழு 25.10.2017 அன்று தீர்மானித்தவாறு, ஒற்றைச் சாளர கலந்தாய்வு முடிவு பெறும் நாளான 24.07.2018 லிருந்து 15-வது நாளில் (08.08.2018) அனைத்துச் சுயநிதி கல்வியியல் கல்லூரிகளும், நடப்புக் கல்வி ஆண்டுக்கான (2018-2019) பி.எட் சேர்க்கையை முடித்துவிடவேண்டும்.

எனவே, பி.எட் சேர்க்கைக்கான கடைசி நாள் **08.08.2018 அன்று மாலை 5.45 மணி** என்பதால், அதற்குப் பின்னர் சுயநிதி கல்வியியல் கல்லூரிகளால் செய்யப்படும் பி.எட் மாணவர் சேர்க்கைக்கு எக்காரணத்தைக்கொண்டும் இப்பல்கலைக்கழகம் சேர்க்கை அங்கீகாரம் (Eligibility) வழங்காது எனத் தெரிவித்துக்கொள்ளலாகிறது.

இப்பல்கலைக்கழக இணையதளத்திலுள்ள (www.tnteu.ac.in) admission portal-ல், ஒவ்வொரு கல்லூரியிலும் ஏற்கெனவே பி.எட் மாணவர் சேர்க்கைக் குழுவால் (Admission committee) தேர்வு செய்யப்பட்டுள்ள தகுதியான (only qualified) மாணவர்களின் விவரங்களை **25.07.2018 முதல் 08.08.2018 மாலை 5.45 மணி** வரை பதிவேற்றம் செய்யலாம். ஏற்கெனவே பார்வையில் கண்ட கடிதத்தில் தெரிவித்தவாறு, சேர்க்கை செய்யப்பட்ட தகுதியான அனைத்து மாணவர்களது விவரங்களையும் பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் (upload) செய்த பின்பு, இணையதளத்திலிருந்து மாணவர்களது பட்டியலை (Admitted students list - Form-A) பதிவிறக்கம் (download) செய்யவும், மேலும், பதிவேற்றம் செய்த மாணவர்களுக்கான தகுதிக்கட்டணத்தை (Eligibility fees) ஒரே வங்கி வரைவோலையாக (demand draft) **09.08.2018** அன்றோ அல்லது அதற்கு முன்போ எடுத்துத் தாயாராக வைக்கவும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கல்வியியல் கல்லூரிகளால் 09.08.2018 தேதிக்கு பின்னர் எடுக்கப்படும் வங்கி வரைவோலைகள் ஏற்கப்படாது. சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு அதிகமான அல்லது குறைவான தொகைக்கு எடுக்கப்படும் வங்கி வரைவோலைகள் (demand draft with less or excess amount) ஏற்கப்படாது. ஒன்றுக்கு மேற்பட்டு எடுக்கப்படும் வங்கி வரைவோலைகளையும் (multiple demand drafts) இப்பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கும் என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட சேர்க்கை விண்ணப்பத்திலுள்ள (filled in admission application) விவரங்களை, கல்லூரியின் சேர்க்கைக் குழு (admission committee) சரிபார்த்த பின், பல்கலைக்கழக ஒப்புதல் பெற்ற அக்கல்லூரியின் முதல்வரும் சரிபார்த்து கையொப்பமிட்டு அவற்றைத் தயார் நிலையில் வைக்க வேண்டும்.

கல்வியியல் கல்லூரிகள் பதிவேற்றம் செய்த மாணவர்களது தகவல்களை, அவர்களது அசல் கல்வி மற்றும் சாதிச் சான்றிதழ்களுடன் பல்கலைக்கழக அதிகாரிகள் சரிபார்ப்பதற்காக, கீழ்க்கண்ட ஆவணங்களைக் கீழே கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ள நாட்களில் அதற்கெதிரே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இயங்கும் கல்லூரிகள் பல்கலைக்கழகத்திற்கு நேரில் வந்து சமர்ப்பிக்கவேண்டும்.

1. சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களது தகுதிக்கட்டணம் (eligibility fee), 09.08.2018 அல்லது அதற்கு முந்தைய தேதிகளில் எடுக்கப்பட்ட ஒரே வங்கி வரைவோலையாக.

2. மாணவர்கள் பூர்த்தி செய்து, சேர்க்கைக் குழுவால் சரிபார்க்கப்பட்டு, முதல்வர் கையொப்பமிட்ட விண்ணப்பங்கள்.

3. சேர்க்கை செய்யப்பட்ட அனைத்து தகுதியான மாணவர்களின் அசல் (original) கல்விச் சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ்கள்.

4. மாணவர்களது விவரங்கள் பதிவேற்றம் செய்து, பின் இணையதளத்திலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியே பதிவு இறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (Individual online Admission Application Printouts)

5. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல் (Form-A)

6. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் தகுதிப் பட்டியல் (Form-B)

7. அண்மையில் NCTE Regulation-2014 விதியின்படி வழங்கிய அங்கீகார (Recognition) ஆணையின் நகல், கடைசியாக பல்கலைக்கழகத்திலிருந்து பெற்ற இணைவு / தொடர் இணைவு (Provisional / Continuation of Provisional Affiliation) ஆணையின் நகல்

## <u>அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்புக்கான கால அட்டவணை</u>

| தேதி | சான்றிதழ் சரிபார்ப்புக்கான கல்லூரிகள் இயங்கும் மாவட்டங்கள் |
|---|---|
| 13.08.2018 | கோயம்புத்தூர், தருமபுரி, கடலூர், புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு, மதுரை, விழுப்புரம், திருநெல்வேலி, நாமக்கல், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, சேலம், வேலூர். |
| 14.08.2018 | தூத்துக்குடி, தேனி, சிவகங்கை, சென்னை, அரியலூர், திண்டுக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், கிருஸ்ணகிரி, நாகப்பட்டினம், திருவாரூர், விருதுநகர், இராமநாதபுரம், நீலகிரி, கரூர், பெரம்பலூர். |

அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு முடிந்த பின்பு, அன்றே அசல் கல்வி மற்றும் சாதிச்சான்றிதழ்களைத் திரும்பப் பெற்றுச் செல்ல வேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது.

**இச்சுற்றிக்கையானது, NCTE Recognition ஆணை, பல்கலைக்கழகத்தின் 2018-2019-ஆம் ஆண்டுக்கான இணைவு / தொடர் இணைவு ஆணை (provisional /continuation of provisional affiliation) பெறாத கல்வியியல் கல்லூரிகளுக்கு எக்காரணத்தைக் கொண்டும் பொருந்தாது.**

**பதிவாளர் (பொ)**